binils.com

**அனுப்புநர்**

திரு.சா.சேதுராம வர்மா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

செய்தி ஆசிரியர்,
அனைத்து செய்தி ஊடகங்கள்.

**ந.க.எண்.003610/எச்.1/2022** **நாள். 18.06.2022**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6 – மே 2022 பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வுகள் – தற்காலிக மதிப்பெண் சான்றிதழ் (Provisional Certificate) / மதிப்பெண் பட்டியல் (Statement of Marks) பதிவிறக்கம் செய்தல் – விடைத்தாள் நகல் / மறுகூட்டலுக்கு விண்ணப்பித்தல் – தொடர்பான அறிவிக்கை – வெளியிடக் கோருதல்.

------

நடைபெற்ற மே 2022 பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதிய மாணவர்கள் மற்றும் கடந்தாண்டுகளில் ஏற்கனவே முதலாம் ஆண்டு தேர்வெழுதி தோல்வியுற்ற (+1 Arrear) பாடங்களை தற்போது மே 2022–ல் எழுதியுள்ள மாணவர்களுக்கான தேர்வு முடிவுகள் வெளியிட்ட பின்னர், தற்காலிக மதிப்பெண் சான்றிதழ் (Provisional Certificate) (பத்தாம் வகுப்பு) / மதிப்பெண் பட்டியல் (Statement of Marks) (பன்னிரெண்டாம் வகுப்பு & +1 Arrear) ஆகியவற்றை பதிவிறக்கம் செய்து கொள்வதற்கான நாட்கள், விடைத்தாள் நகல் / மறுகூட்டலுக்கு விண்ணப்பிப்பதற்கான நாட்கள் குறித்த தகவல்கள் அடங்கிய செய்தி குறிப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இச்செய்திக் குறிப்பினை மாணவர்கள் / தனித்தேர்வர்கள் மற்றும் பொதுமக்கள் அறியும் வகையில் தங்கள் நாளிதழில் / தொலைக்காட்சி / வானொலியில் செய்தியாக வெளியிடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**"இது விளம்பரம் அல்ல"** எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஒம்./–**
**இயக்குநர்**

**இணைப்பு:** செய்திக்குறிப்பு

binils.com

**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6.**

**மே 2022 பத்தாம் வகுப்பு / மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகள்**
**தற்காலிக மதிப்பெண் சான்றிதழ் (பத்தாம் வகுப்பு) /**
**மதிப்பெண் பட்டியல் (மேல்நிலை இரண்டாம் ஆண்டு) பதிவிறக்கம் செய்தல் &**
**மறுகூட்டல் / விடைத்தாள் நகலுக்கு விண்ணப்பித்தல்**

**செய்திக்குறிப்பு**

**<u>தற்காலிக மதிப்பெண் சான்றிதழ் / மதிப்பெண் பட்டியல் பதிவிறக்கம் செய்தல்:</u>**

**24.06.2022** முற்பகல் 11.00 மணி முதல் மே 2022, பத்தாம் வகுப்பு / பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வெழுதிய பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளி தலைமையாசிரியர்கள் வழியாகவும், தனித்தேர்வர்கள் தாங்கள் தேர்வெழுதிய தேர்வு மைய தலைமையாசிரியர்கள் வழியாகவும், தற்காலிக மதிப்பெண் சான்றிதழ் / மதிப்பெண் பட்டியலை பெற்றுக் கொள்ளலாம்.

மேலும், **24.06.2022** முற்பகல் 11.00 மணி முதல் பள்ளி மாணவர்கள் / தனித்தேர்வர்கள் தங்களுக்கான தற்காலிக மதிப்பெண் சான்றிதழ் / மதிப்பெண் பட்டியலை தங்களது பிறந்த தேதி, பதிவெண் ஆகிய விவரங்களை அளித்து www.dge.tn.nic.in என்ற இணையதளத்திலும் தாங்களே பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**<u>பத்தாம் வகுப்பு தேர்வர்கள் – மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்கும் முறை:</u>**

மே 2022, பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் தாம் தேர்வெழுதிய எந்தவொரு பாடத்திற்கும் பள்ளி மாணவர்கள் / தனித்தேர்வர்கள் மறுகூட்டலுக்கு (Retotalling) விண்ணப்பிக்கலாம்.

மே 2022 பத்தாம் வகுப்பு தேர்வெழுதி விடைத்தாட்களின் மதிப்பெண் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்க விழைவோர் **22.06.2022 (புதன் கிழமை)** காலை 10.00 மணி முதல் **29.06.2022 (புதன் கிழமை)** மாலை 5.00 மணி வரை பள்ளி மாணவர்கள் தங்கள் பள்ளி வழியாகவும், தனித்தேர்வர்கள் தாங்கள் தேர்வெழுதிய தேர்வு மையம் வழியாகவும் விண்ணப்பிக்க வேண்டும்.

**<u>மறுகூட்டல் (Retotal) கட்டணம்:</u>**

| (பாடம்) | | (தொகை) |
|---|---|---|
| ஒவ்வொரு பாடத்திற்கும் | – | ரூ.205/– |

binils.com



**<u>மறுகூட்டலுக்கான கட்டணம் செலுத்தும் முறை:</u>**

மறுகூட்டலுக்கான கட்டணத்தை பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளியிலும், தனித்தேர்வர்கள் தாங்கள் தேர்வெழுதிய தேர்வு மையத்திலும் பணமாகச் செலுத்த வேண்டும். மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்கும்போது வழங்கப்படும் ஒப்புகைச் சீட்டினை மாணவர்கள் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள வேண்டும். ஒப்புகைச் சீட்டில் குறிப்பிட்டுள்ள விண்ணப்ப எண்ணைப் பயன்படுத்தியே தேர்வர்கள் மறுகூட்டல் முடிவுகளை அறிந்துகொள்ள இயலும்.

**<u>பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வர்கள் – விடைத்தாள் நகல் / மறுகூட்டல்–I விண்ணப்பிக்கும் முறை:</u>**

விடைத்தாள் நகல் / மறுகூட்டல்–**I** கோரி விண்ணப்பிக்க விரும்பும் பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளிகள் வழியாகவும், தனித்தேர்வர்கள் தாங்கள் தேர்வெழுதிய தேர்வு மையங்கள் வழியாகவும் 22.06.2022 (புதன் கிழமை) காலை 10.00 மணி முதல் 29.06.2022 (புதன் கிழமை) மாலை 5.00 மணி வரை விண்ணப்பிக்கலாம்.

விடைத்தாள் நகல், மறுகூட்டல் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றிற்கு மட்டுமே தேர்வர்கள் விண்ணப்பிக்க இயலும். தேர்வர்கள் தங்களது **விடைத்தாளின் நகல் வேண்டுமா? அல்லது மதிப்பெண் மறுகூட்டல் செய்ய வேண்டுமா? என்பது குறித்து தெளிவான முடிவு** செய்து கொண்டு அதன்பின்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விடைத்தாள் நகல் பெற்றவர்கள் மட்டுமே விடைத்தாள் மறுமதிப்பீடு கோரி பின்னர் விண்ணப்பிக்க இயலும்.

மதிப்பெண் மறுகூட்டல் கோரி விண்ணப்பிக்கும் பாடத்திற்கு விடைத்தாள்களின் நகல் கோரி விண்ணப்பித்திட இயலாது. விடைத்தாளின் நகல் பெற்ற பிறகு அவர்கள் மறுகூட்டல் / மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க வாய்ப்பு அளிக்கப்படும்.

| **வகுப்பு** | **விவரம்** | **நாள்** | **இணையதள முகவரி / விண்ணப்பிக்கும் இடம்** |
|---|---|---|---|
| **பத்தாம் வகுப்பு** | **தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்கள் பதிவிறக்கம் செய்யும் நாட்கள்** | **24.06.2022 முதல்** | **www.dge.tn.gov.in** |
| | **மறு கூட்டலுக்கு விண்ணப்பிக்கும் நாட்கள்** | **22.06.2022 முதல் 29.06.2022 வரை** | பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளிகள் தனித்தேர்வர்கள் தாங்கள் தேர்வெழுதிய தேர்வு மையங்கள் |

..3..

binils.com



| | | | |
|---|---|---|---|
| **மேல்நிலை இரண்டாம் ஆண்டு** | **மதிப்பெண் பட்டியல்கள் பதிவிறக்கம் செய்யும் நாட்கள்** | **24.06.2022 முதல்** | **www.dge.tn.gov.in** |
| | **விடைத்தாள் நகல் / மறுகூட்டல்–ிற்கு விண்ணப்பிக்கும் நாட்கள்** | **22.06.2022 முதல் 29.06.2022 வரை** | பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளிகள் தனித்தேர்வர்கள் தாங்கள் தேர்வெழுதிய தேர்வு மையங்கள் |

விடைத்தாளின் நகல் (**Copy of the answer script**) பெறுவதற்கான கட்டணம் :

ஒவ்வொரு பாடத்திற்கும் – ரூ.275/–

**மறுகூட்டல்–I (Re–totalling–I) கட்டணம்**

உயிரியல் பாடத்திற்கு மட்டும் – ரூ.305/–
ஏனையப் பாடங்கள் (ஒவ்வொன்றிற்கும்) – ரூ.205/–

பணம் செலுத்தும் முறை :

தேர்வர்கள் விடைத்தாள்களின் நகலிற்கான கட்டணத்தை விண்ணப்பிக்கவுள்ள பள்ளியிலேயே பணமாகச் செலுத்த வேண்டும்.

விடைத்தாள் நகல் – இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளும் முறை :

விடைத்தாள் நகல் விண்ணப்பிக்கும்போது வழங்கப்படும் ஒப்புகைச் சீட்டினை மாணவர்கள் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும். ஒப்புகைச் சீட்டில் குறிப்பிட்டுள்ள விண்ணப்ப எண்ணைப் பயன்படுத்தியே தேர்வர்கள் தங்களது விடைத்தாளின் நகலினை இணையதளம் வழியாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

விடைத்தாளின் நகலினை இணையதளம் வழியாக பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டிய நாள் மற்றும் இணையதள முகவரி பின்னர் ஊடகங்கள் வாயிலாகவும், www.dge.tn.nic.in என்ற இணையதளத்திலும் வெளியிடப்படும்.

**ஒம்./–**
**இயக்குநர்**

**இடம்: சென்னை–6**
**நாள்:** 18.06.2022.

**நகல்**

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
3. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்